செ.வெ.எண்: 24 / ஆகஸ்ட்                                                                                   நாள் : 10.08.2017

## இராமநாதபுரம் மாவட்டம்

## சத்துணவு மையத்தில் மாணவர்களுக்கு முறையாக உணவு வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளாத சத்துணவு அமைப்பாளர் தற்காலிக பணிநீக்கம்

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் நடவடிக்கை

இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி ஊராட்சி ஒன்றியம், ஏர்வாடி அரசு மேல்நிலைப்பள்ளியில் உள்ள சத்துணவு மையத்தில் மாணவர்களுக்கு முறையாக உணவு வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளாத சத்துணவு அமைப்பாளரை தற்காலிக பணிநீக்கம் செய்து மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் நடவடிக்கை.

இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி ஊராட்சி ஒன்றியம், ஏர்வாடி அரசு மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் 03.08.2017 அன்று நேரில் கள ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது இப்பள்ளியில் செயல்பட்டு வரும் சத்துணவு மையத்திலும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த சத்துணவு மையத்தில் அனுமதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை 70 ஆகும். இந்நிலையில் ஆய்வின் போது 52 மாணவர்களுக்கு மட்டுமே முட்டை அவிக்கப்பட்டிருந்தது. மேலும் 70 மாணவர்களுக்கு உணவுப் பொருள் எடுக்கப்பட்டதாக பதிவேடுகளில் கணக்கு எழுதப்பட்டிருந்தது. இதுதவிர, சம்பந்தப்பட்ட சத்துணவு மைய அமைப்பாளர் மாணவர்களுக்கு அளிக்கப்படும் உணவினை முறையாக கரண்டி பயன்படுத்தாமல் உணவினை கிளறப்பட்டதாக ஆய்வின் போது கண்டறியப்பட்டது.

அதனடிப்படையில் மாணவர்களுக்கு முறையாக உணவு வழங்கப்படாததாலும், சரியான உணவுப் பொருட்கள் எடுக்கப்படாததாலும், முட்டை முறையாக வழங்கிட நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தினால் சம்பந்தப்பட்ட சத்துணவு அமைப்பாளர் திருமதி.பிரேமாவதி என்பவரை தற்காலிக பணிநீக்கம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**